**கவனிக்க.-** 2008.05.02ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1549 - 2008 මැයි 09 වැනි සිකුරාදා - 2008.05.09

*1549 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 438 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 441 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மே 16 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மே 02 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு

கமரா இயக்குநர் (வீடியோ) - தரம் III பதவி

வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் III ஆம் தரத்திலான கமரா இயக்குநர் (வீடியோ) பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2008.05.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னராக "செயலாளர், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு, 2 ஆம் மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கமரா இயக்குநர் (வீடியோ) III தர பதவி" என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு**.– (அ) பின்காட்டப்படும் மாதிரி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பங்கள் தபாலின்போது இழந்துபோவது அல்லது தாமதித்தல் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகளைப் பற்றி கவனம் செலுத்தப்பட மாட்டாது.

(இ) ஏற்கனவே பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இந்தப் பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 1 ஆகும் (ஒன்று)

2. **சேவையில் நியமிப்பதன் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்**.- (அ) இந்தப் பதவி நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பளத் திற்குரியது. விதவை, அநாதை இளைப்பாற்றுச் சம்பள முறைக்கு சந்தாப்பணத்தைச் செலுத்த வேண்டும். நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்குரியது.

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி II (அ) வின் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அரசசேவை நியமனங்களுக் குரிய பொது நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும்.

(இ) அரசகரும மொழிக் கொள்கைக்கிணங்கியும் அரச நிருவாக சுற்றறிக்கை இல. 07/2007 இன் பிரகாரம் அரசகரும மொழித் தேர்ச்சி உரியகால எல்லைக்குள் பெறவேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்**.- பதவிக்குரிய மாதாந்த சம்பளம் பின்வருமாறு :

(அ) அரச நிருவாக சுற்றறிக்கை 6/ 2006 இன் பிரகாரம் (MTI – 2006 )

(ஆ) ரூபா 14,000 – 10 x 120 – 11 x 140 – 6 x 210 – 14 x 290 - ரூபா 22,060 (III/II "ஆ" தரத்திற்காக ஏற்புடையது)

(இ) நியமனம் பெற்று 3 ஆண்டுகளுக்கு முன்னர் வினைத்திறமைப் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும். வயதை அடிப்படை யாகக் கொண்டு வினைத்திறமைப் பரீட்சையிலிருந்து விடுவிக் கப்பட மாட்டாது.

4. **தேவைப்படும் தகைமைகள்**.- (அ) இலங்கையின் பிரசை யாவது,

(ஆ) சிறந்த ஒழுக்க நெறியுடையவராகவும் நல்ல தேகாரோக்கிய முடையவராகவும் இருத்தல்,

(இ) 2008.05.30 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்டிருக்க வேண்டியதுடன் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல். (ஏற்கனவே அரசாங்க உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டி ருக்கின்றவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது)

5. **கல்வித் தகைமைகள்**.- (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் இரண்டு தடவைக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல். (ஒரு தடவையில் ஆகக்குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.)

அல்லது

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களுடன், 4 பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் தேசிய பொது கல்விச்சான்றிதழ் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தி யடைந்திருக்க வேண்டும். (ஒரு தடவையில் ஆகக்குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்)

6. **தொழிற்தகைமைகள்**.- (அ) அங்கீகரிக்கப்பட்ட சர்வ கலாசாலை யொன்றில் அல்லது தொழிற்கல்வி வித்தியாலய மொன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றில் இருந்து வழங்கப்பட்ட புகைப்படவியல் சம்பந்தப்பட்ட டிப்ளோமாச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி சம்பந்தப்பட்ட நிறுவனமொன்றில் வழங்கப்பட்ட புகைப்படவியல் சம்பந்தமான ஓராண்டிற்குக் குறையாது அரைநேர தொழிற்பாடத்திட்டமொன்றை வெற்றிகரமான முறையில் பயின்று சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

7. **அனுபவம்**.- ஒரு புகைப்படச் சிற்பியாக 5 ஆண்டுகளான அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபிக்க வேண்டும்)

8. **ஆட்சேர்ப்பு முறை**.- நேர்முகப் பரீட்சையொன்று மூலமும் செய்முறைப் பரீட்சையொன்று மூலமும் ஆட்சேர்க்கப்படுவார்கள்.

டபிள்யு. பி. கணேகல,
செயலாளர்,
வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு.

வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு,
2 ஆவது மாடி,
'செத்சிறிபாய',
பத்தரமுல்ல,
2008, ஏப்பிறல் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு**

*கமரா இயக்குநர் (வீடியோ) - தரம் III பதவி*

1. முழுப்பெயர் (தெளிவாக) திரு./திருமதி/செல்வி :-----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.

3. முகவரி (முகவரி மாறினால் அதனை உடனே அறிவித்தல் வேண்டும்) :-----.
   (அ) தனிப்பட்ட முகவரி :-----.
   தொலைபேசி இல. :-----.

   (ஆ) அலுவலக முகவரி :-----.
   தொலைபேசி இல. :-----.

4. (அ) பிறந்த திகதி :-

   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

   (ஆ) விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படும் இறுதி நாளுக்கு வயது :-

   வருடங்கள் : ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

   (இ) தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :-
   ☐☐☐☐☐☐☐☐☐☐

5. நீர் இலங்கைப் பிரசையா :-----.

6. (அ) பால்: (ஆண்/பெண்) :-----.
   (ஆ) திருமணமானவரா/திருமணமாகாதவரா? :-----.

7. பின்வரும் பாடங்களில் சித்தியடைந்துள்ள உயர் பரீட்சை :-

   (1) சிங்களம் :----.
   (2) தமிழ் :----.
   (3) ஆங்கிலம் :----.

8. கல்வி/தொழிற் தகைமைகள் :-

   8.1 க. பொ. த. (சா. த.) /தே. பொ. சா. பரீட்சை :-----.

   ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

   8.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை :-

   ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

   8.3

| பட்டம் | ஆண்டு | பாடங்கள் |
|---|---|---|
| | | |

9. ஏற்கனவே சேவை பார்ப்பதெனின் அதுபற்றிய விபரங்கள் :-

| நிறுவனம் | பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| | | | | |

10. தொழிலிற்குரிய பிற தகைமைகள் :-----.

11. நீர் ஏதேனும் குற்றத்திற்கு எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றவாளியாயுள்ளீரா என்பதனை :-----.

12. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளீரா என்பதனை (எனின் விபரங்கள் தருக) :-----.

13. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) இணைக்கப்பட்டுள்ளன.

   (அ) பிறப்புச் சான்றிதழ்
   (ஆ) கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்
   (இ) தொழில் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள்
   (ஈ) அனுபவம் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள்.

14. உங்களைப்பற்றிய விபரங்களை அறியக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்களும் முகவரிகளும் (தொலைபேசி இலக்கங்களுடன்) :-----.

   1. :-----.

   2. :-----.

15. உரிய பிற தகவல்கள் :-----.

16. இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதேனும் உண்மையற்றவையென அல்லது பிழை யானவையென என்னைத் தெரிவுசெய்ய முன்னர் கண்டுபிடிப்பின் நான் தகுதியற்றவனாகுவேன் எனவும், நியமனத்திற்கு பின்னர் அதனைக் கண்டுபிடிப்பின் எவ்வித நட்டஈடும் வழங்காமல் பதவியிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

..................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

17. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(விண்ணப்பதாரர் அரசாங்கத்தில்/உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டிருந்தால் மாத்திரம்)

திரு./திருமதி/செல்வி ......................................................... என்பவர் இந்தத் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கிறார் எனவும் அவரினது சேவையும் நடத்தையும் திருப்திகரமானதுவெனவும் இந்த அறிவித்தலில் விளக்கப்பட்டுள்ளவாறு கூறப்பட்ட பதவிக்கான தகைமைகளைக் கொண்டுள்ளாரெனவும் அவர் கூறப்பட்ட பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இத்தால் விளக்கப்படுகின்றேன்.

...............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

5-133

---

## வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு

இலங்கைத் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

### புலமைச் சொத்து தொழில்நுட்ப உதவியாளர் பதவி

இலங்கைத் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் நிலவும் மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடத்திற்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக ஏ4 அளவிலான ஒரு தாளில் தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ‘பணிப்பாளர் நாயகம், இலங்கைத் தேசிய புலமைச் சொத்து அலுவலகம், ‘சமாகம் மெதுர’, மூன்றாவது மாடி, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10’ என்ற முகவரியிடப்பட்டு 2008 மே 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாத அல்லது முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெற்ற விண்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘புலமைச் சொத்து தொழில்நுட்ப உதவியாளர் பதவி’ எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

1. **பதவி**.- புலமைச் சொத்து தொழில்நுட்ப உதவியாளர் (பதவிகளின் எண்ணிக்கை 1)

2. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- (i) பௌதீக விஞ்ஞானம் அல்லது உயிரியல் விஞ்ஞானத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டம்.

(ii) இப்பதவிக்கு ஆங்கிலத்தில் பணியாற்றுவதற்கான ஆற்றல் அவசியம்.

3. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 15,215 – 10 x 215 – 4 x 240 – 7 x 320 – 15 x 360 - ரூபா 25,965

(06/2006/iv ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க)

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரி 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச/மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு உயர் வயதுக் கட்டுப்பாடு ஏற்புடையதாகாது.

5. தொழில் நிபந்தனைகள்.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையது மாகும்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி விதவைகள் மற்றும் அநாதை பங்காளர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(iii) தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

6. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறுகின்றவர்களிடமிருந்து மேற்படி பதவிகளுக்கான தெரிவு இடம்பெறும்.

7. **ஏனையவை**.- தற்போது அரச/மாகாண சேவையில் உள்ளோர் தமது விண்ணப்பப்படிவங்களைத் திணைக்கள/ நிறுவனத் தலைவரூடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

----,
புலமைச் சொத்துப் பணிப்பாளர் அதிபதி.

இலங்கைத் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்,
‘சமாகம் மெதுர’,
மூன்றாவது மாடி,
டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

| |
|---|
| |

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்

மாதிரி விண்ணப்பப்படிவம்

### வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு

### இலங்கைத் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

புலமைச் சொத்து தொழில்நுட்ப உதவியாளர் பதவி

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் திரு./செல்வி/திருமதி :-----.

2. முழுப் பெயர் :-----.

3. நிரந்தர முகவரி :-----.

4. அஞ்சல் முகவரி :-----.

5. தேசிய அடையாள அட்டை இல. :-----.

6. பால் :-----.

7. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

(ii) 2008, மே 26 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

8. திருமணமானவரா/திருமணமாகாதவரா :-----.

9. கல்வித் தகைமைகள் :-

| பட்டம் | வருடம் | பாடங்கள் | வகுப்பு | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை** :

.......................................................................................... ஆகிய நான் இவ்விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவகையில் உண்மையானவை என உறுதியுரைக்கிறேன். மேலும் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என கண்டுபிடிக்கப்படுமிடத்து நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவேன் என்பதையும் நியமனத்தின் பின்பு அவ்வாறான சந்தர்ப்பத்தில் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன்.

....................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

11. **தற்போது அரச/மாகாண சேவையில் பதவி வகிக்கின்றன விண்ணப்பதாரிகளாயின் திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ........................................................... என்பவர் தற்போது இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ஒரு நிரந்தர/தற்காலிக/அமைய/பயிலுனர் அலுவலராகப் பணிபுரிகின்றார் எனவும் அவர் எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) உட்படவில்லை எனவும், அவர் மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இங்கு உறுதிப்படுத்துகிறேன்.

................................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

பதவி :-----.

அமைச்சு/திணைக்களம்/நிறுவனம் :-----.

திகதி :-----.

5-135

---

## திருத்தம்

### பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

மேற்போந்த பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2008.04.11 ஆந் திகதிய 1545 ஆம் இலக்கம் கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தல் தொடர்பானது-

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு வயது 28 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

.....................
பொலிஸ் மா அதிபர்.

5-293

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிருவாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை பொறியியற் சேவை, இலங்கை பொலிஸ் சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழிப் பரீட்சையும் - 2008

மேற்குறிப்பிட்டுள்ள சேவைகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள் 2008, ஓகத்து மாதம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடாத்தப்படும்.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக் கூடியதாக நேர் அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்** :

| சேவை | வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் | வர்த்தமானிப் பத்திரிகையின் இலக்கமும் திகதியும் | பாடத்திட்டத்திற்கு ஏற்புடைய பின்னிணைப்பு |
|---|---|---|---|
| இலங்கை நிருவாக சேவை | I ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 2005.11.14 1419/3 | 'இ' |
| | II ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | - அதே - | 'ஈ' |
| | இரண்டாம் மொழிப் பரீட்சை | | 'உ' |
| இலங்கை கணக்காளர் சேவை | I ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 2001.07.27 1194/26 | 'ஆ' |
| | II ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | - அதே - | 'ஈ' |

வினைத்திறன்காண் தடைப் பரீட்சை பாடங்களுக்கு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறாக பல தடவைகளில் தோற்றுவதற்கு அலுவலர்கள் அனுமதிக்கப்படுவர். எவ்வாறாயினும் விதித்துள்ள காலகட்டத்திற்குள் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைவது அத்தியாவசியமானதாகும்.

இரண்டாம் மொழிப் பாடத்திற்கு தோற்றுகின்ற அலுவலர்களுக்கான வாய்மொழிப் பரீட்சைகள் ஒரு நிலையத்தில் நடாத்தப்படும்.

4. (அ) ஒவ்வொரு சேவைக்குரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் பின்வருமாறு :-

**இலங்கை நிருவாக சேவை**

| | I ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | | II ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | | |
|---|---|---|---|---|---|
| பாட இல. | பாடம் | கால வரையறை மணித்தியாலம் | பாட இல. | பாடம் | கால வரையறை மணித்தியாலம் |
| 01 | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 | 20 | பொருளாதார சமூக கொள்கைகள் (இலங்கை மீது விசேட கவனத்துடன் | 3 |
| 02 | இலங்கை சட்ட முறைகள் | 3 | 21 | அபிவிருத்தி நிருவாக நடைமுறை (இலங்கை மீது விசேட கவனத்துடன் | 3 |
| 03 | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 | 22 | முகாமையும் அமைப்பும் | 3 |
| | | | 23 | அரச துறையின் நிதி முகாமை | 3 |
| 05 | நிருவாகம் | 3 | | | |
| 06 | பொருளியல் | 3 | | | |
| 07 | சமூகவியல் | 3 | | | |
| 08 | ஆங்கிலம் | 3 | | | |
| | இரண்டாம் மொழிப் பரீட்சை | | | அவசியப்படுமாயின் இதில் சேவைகளின் அலுவலர்களும் இரண்டாம் மொழிப் பரீட்சைக்குத் தோற்றலாம். | |
| 09 | சிங்களம் (எழுத்துமூலம்) | 2 | | | |
| 10 | தமிழ் (எழுத்துமூலம்) | 2 | | | |
| 11 | ஆங்கிலம் (எழுத்துமூலம்) | | | | |
| 12 | சிங்களம் (வாய்மொழி மூலம்) | | | | |
| 13 | தமிழ் (வாய்மொழி மூலம்) | | | | |
| 14 | ஆங்கிலம் (வாய்மொழி மூலம்) | | | | |

**இலங்கை கணக்காளர் சேவை**

| I ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | | | II ஆம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | | |
|---|---|---|---|---|---|
| பாட இல. | பாடம் | கால வரையறை மணித்தியாலம் | பாட இல. | பாடம் | கால வரையறை மணித்தியாலம் |
| 30 | அரசாங்க நிதிமுறை | 3 | 36 | முகாமைத்துவ கணக்கியல் | 3 |
| 31 | சட்டமும் முகாமையும் | 3 | 37 | அரசாங்க நிதி முகாமை | 3 |
| 32 | நிருவாகம் | 3 | 38 | முகாமையும் அமைப்பும் | 3 |
| 33 | அறிக்கை எழுதுதலும் முகாமைக்கு தகவல்களை முன்வைத்தலும் | 3 | | இரண்டாம் மொழிப் பரீட்சை இதற்காக விண்ணப்பிக்கும் அலுவலர்கள் பாடங்கள் மற்றும் பாட இலக்கங்களை இலங்கை நிருவாக சேவையின்கீழ் பார்க்கவும். | |

**இலங்கை பொலிஸ் சேவை**

| பாட இல. | பாடம் | கால வரையறை மணித்தியாலம் |
|---|---|---|
| 80 | நீதி நிருவாகச் சட்டமும் சான்றுக் கட்டளைச் சட்டமும் | 3 |
| 81 | தண்டனைச் சட்டக்கோவையும் பொலிஸ் கட்டளைச் சட்டமும் | 3 |
| | இரண்டாம் மொழிப் பரீட்சை.- இதற்காக விண்ணப்பிக்கும் அலுவலர்கள் பாடங்கள் மற்றும் பாட இலக்கங்களை இலங்கை நிருவாக சேவையின் கீழ் பார்க்கவும். | |

**இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை**

| பாட இல. | பாடம் | கால வரையறை மணித்தியாலம் |
|---|---|---|
| 04 | நிதிமுறைகள் | 3 |
| 05 | நிருவாகம் | 3 |

4. (ஆ) பரீட்சையின் பெயர்கள் :

| | | |
|---|---|---|
| இலங்கை நிருவாக சேவை | முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 01 |
| இலங்கை நிருவாக சேவை | இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 02 |
| இரண்டாம் மொழிப் பரீட்சை | | 03 |
| இலங்கை கணக்காளர் சேவை | முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 01 |
| இலங்கை கணக்காளர் சேவை | இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 02 |
| இலங்கை விஞ்ஞான சேவை | முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 01 |
| இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 01 |
| இலங்கை பொலிஸ் சேவை | முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 01 |
| இலங்கை பொறியியல் சேவை | முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 01 |

5. **வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளில் சித்திபெறவேண்டிய தேவைப்பாட்டிலிருந்து விலக்களித்தல் :**

| இலங்கை கணக்காளர் சேவை | பாடம் | விலக்களிப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் |
|---|---|---|
| இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | 36 முகாமை கணக்கியல்<br>37 அரசாங்க நிதி முகாமை<br>38 முகாமையும் அமைப்பும் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் நடாத்தப்படும் அரசாங்க நிதி முகாமை பற்றிய டிப்ளோமா<br>அல்லது<br>தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் மூலம் நடாத்தப்படும் கணனி முறைமைகள் திட்டம் பற்றிய டிப்ளோமா<br>அல்லது<br>கணக்கியல், வர்த்தகம், முகாமை, அரசாங்க நிருவாகம், வியாபார நிருவாகம், கணனியியல் ஆகிய துறைகளில் பட்டப்பின் படிப்பு நிலை டிப்ளோமா/முதுமாணி/பி.எச்.டி. பட்டம் பெற்றிருத்தல்<br>அல்லது<br>பட்டயக் கணக்காளர் நிறுவனம், பட்டய முகாமைத்துவ கணக் காளர்களின் நிறுவனம், சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர்களின் பட்டயம் பெற்ற சங்கம், பிரித்தானிய கணனிச் சங்கம், அவுஸ்திரேலிய கணனிச் சங்கம் ஆகிய இவற்றுள் ஒன்றின் இறுதிப் பரீட்சை<br>அல்லது<br>சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு சமமட்டத்திலான தகைமைகளும் |

6. பரீட்சார்த்திகள் மொழிப் பாடங்களுக்குரிய வினாப்பத்திரங்கள் தவிர்ந்த மற்றைய எல்லாப் பாடங்களுக்கும் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் பதிலளிப்பதற்கான ஏற்பாடுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் செய்யப்படும்.

7. எவரேனும் பரீட்சார்த்தி தனக்கு உரித்தல்லாது மொழியில் பரீட்சைக்குத் தோற்றினாரென பின்னராக தெரியவந்தால் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் இதில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் 1-7 வரை உள்ள தகவல்கள் முதல் பக்கத்தில் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்தல் வேண்டும். தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்களையும் முழுமைப்பெறாத விண்ணப்பப்படிவங்களையும் அறிவிப்புகள் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். அனுமதி அட்டைகள் தொடர்பாக உசாவும் பொருட்டு பரீட்சைத் திணைக்களத்திடம் அனுப்பிவைக்கும் விண்ணப்பப்படிவத்தில் நிழற்பட பிரதியினை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

9. விண்ணப்பங்கள் 2008, யூன் 16 ஆந் திகதி அல்லது அதற்குமுன் பின்வரும் முகவரியைச் சென்றடையக்கூடியதாக திணைக்களத் தலைவர்களூடாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். உரிய திகதிக்குப் பின்னராகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்,
ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவு,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

10. பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகைக்காக அறிவித்தலொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதி பதிவுசெய்த பற்றுச்சீட்டு கொழும்பிலிருந்து வெளியிடமாயின் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்கான பெக்ஸ் இலக்கம் மற்றும் உசாவும் கடிதம் என்பவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும்.

11. மேலே (10) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விபரங்களைத் தருவதற்கு மறுக்கும் பரீட்சார்த்திகளால் பின்னராக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

12. ஆளடையாள அட்டைகள் சமர்ப்பிப்பது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள 1971, யூன் மாதம் 29 ஆந் திகதிய எஸ்ஈ 274 ஆம் இலக்க சுற்றறிக்கையின்பால் அனைத்துப் பரீட்சார்த்திகளின் கவனம் ஈர்க்கப்படுகிறது. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க கீழ்க்கண்ட சான்றுகளில் ஒன்றை முன்வைப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும் :-

(i) தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

இதற்கு மேலதிகமாக பரீட்சை தொடர்பில் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

13. பரீட்சைக் கட்டணம் கீழ்க்காட்டப்பட்டுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதிக்காக கட்டணமெதுவும் அறவிடப்பட மாட்டாது.
(ஆ) பிற்பட்ட ஒவ்வொரு அமர்வுக்கும் :

| | ரூபா. ச. |
|---|---|
| முழுப் பரீட்சைக்காக | 115.00 |
| ஒரு பாடத்திற்காக | 75.00 |
| வாய்மொழித் தேர்வுக்காக | 75.00 |

பரீட்சார்த்திகள், கையொப்பமிடுவதன் மூலம் பெறுமதி நீக்கம் செய்து, அரசிறை முத்திரைகளின் மூலம் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2008, மே மாதம் ஆந் திகதி.

**இலங்கை நிருவாக சேவை**

*பின்னிணைப்பு 'இ'*

(அ) இலங்கை நிருவாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

* சட்டம்
* நிதி முறைகள்
* நிருவாகம்
* பொருளியல் அல்லது சமூகவியல்
* ஆங்கிலம்

**சட்டம்**

***பாடத்திட்டம்*** :

*பாட இலக்கம் 01- அரசியலமைப்பு சட்டமும் நிர்வாகச் சட்டமும் :*

(i) *வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி அடங்கலாக இலங்கை அரசியலமைப்பின் அமைவும் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பும்*
(ii) *நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, அமைச்சரவையும் பிரதம மந்திரியும், மத்திய அரசின் திணைக்களமும் அரச சேவையும்*
(iii) *நீதி நிர்வாகம்*
(iv) *நிர்வாகத்துடன் தொடர்பான நீதிமன்ற நிர்வாகம்*
(v) *அரச கொள்கைகளுக்கான வழிகாட்டி கொள்கைகளும் அடிப்படை கடமைகளும்*
(vi) *கையளியதிகார வழிச் சட்டம்*
(vii) *அரசினதும் அரச அதிகார சபைகளதும் பொறுப்புக்கள்*
(viii) *அடிப்படை உரிமைகள்*

*பாட இலக்கம் 02- இலங்கை சட்ட முறைகள் :*

(i) *இலங்கை சட்ட வரலாறு*
(ii) *நீதிமன்றங்கள் அமைப்பு*
(iii) *இலங்கையின் நீதிமன்ற கட்டளைச் சட்டம் (6 ஆம் அத்தியாயம்)*
(iv) *1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிர்வாகச் சட்டம்*

*பாட இலக்கம் 03- குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் :*

(i) *தண்டனை சட்டக்கோவை*
(ii) *சான்றுக் கட்டளைச் சட்டம்*

**குறிப்பு**.- *பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு சட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்குரிய புள்ளிகளில் நூற்றுக்கு 35% சத வீதத்தையும் சராசரியாக 40% சதவீதத்தையும் பெறுதல் வேண்டும்.*

* *பாட இலக்கம் 05 – நிருவாகம்*

***பாடத்திட்டம்*** :

* *அலுவலக, வெளிக்கள அமைப்பு முறைகள்*
* *தாபனக் கோவையின் அத்தியாயம்* I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

**குறிப்பு**.- *பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40% சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.*

*பாட இலக்கம் 06 – பொருளியல்*

***பாடத்திட்டம்*** :

* *மதிப்பிடல்.- உற்பத்தி, பங்கீடு பற்றிய சித்தாத்தங்கள் தொடர்பாக விசேட கவனத்துடன் பொருளியில் கோட்பாடுகள்*
* *பண வங்கி முறைகளும், சர்வதேச வர்த்தக நிதி முறைகளும்*
* *இலங்கையின் பொருளாதார அமைவு*

**குறிப்பு**.- *பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40% சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.*

* *பாட இலக்கம் 07 – சமூகவியல்*

***பாடத்திட்டம்*** :

* *சமூக அமைவு முறையும் அமைப்பு இயக்கமும்*
* *மானிட உறவுகளும் தொகுப்புக்களும்*
* *இன உறவு, திருமணமும் குடும்பமும்*
* *கிராமிய, நகர்ப்புறச் சமுதாயம்*

- * சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும்
- * சமூகக் கட்டுப்பாடு
- * கலாச்சார சமய பண்பு பற்றிய தரங்கணிப்புகள்

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40% சத வீதத்தைப் பெறுதல் வேண்டும்.

* பாட இலக்கம் 08 – ஆங்கிலம்

பாடத்திட்டம்.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்களில் சோதிக்கப்படுவர் :

Listening & Speaking Skills
The candidate should possess the ability to function effectively in the following language functions :-

- General Greetings and Introductions
- Giving and Getting Information
- Advising, Suggesting and Expressing Opinions
- Describing Events and Situations
- Telephone skills
- Interviewing skills
- Meeting
- Listening and Note Taking skills

*English Grammar*
A suitable level of proficiency on the following forms of grammar in the Spoken the Written language is expected from the candidate :

- Tense and Number
- Sentences (Simple/Compound/ Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives & Adverbs
- Determiners
- Prepositions

*Writing Skills*
The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study :

- Internal modes of Communication
- Formal Correspondence skills
- Writing Descriptions/Explanations
- Summary writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/Invitations
- Comprehension

*Reading Skills*
Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected :

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (verbal/written)
- Understanding the cohesion and coherence of a passage

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40% சத வீதத்தைப் பெறுதல் வேண்டும்.

பின்னிணைப்பு 'ஈ'

(ஆ) இலங்கை நிருவாக சேவை இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(i) பொருளியலும் சமூகவியற் கொள்கையும் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்)
(ii) அபிவிருத்தி நிருவாக நடைமுறை (இலங்கை முக்கிய கவனத்துடன்)
(iii) முகாமையும் அமைப்பு முறைகளும்
(iv) அரச துறையின் நிதி முகாமை

**பாடத்திட்டம்**

* பாட இலக்கம் 20- **பொருளாதார சமூகக் கொள்கை (இலங்கையைப் பற்றிய விசேட கவனத்துடன்)** :

இலங்கையில் பொருளாதாரச் சமூகக் கொள்கையை உருவாக்கும்போது செயல் விளைவு உண்டாக்கும் விடயங்கள் பற்றிய பரீட்சார்த்திகளுக்குள்ள அறிவை சோதிக்கும் முகமாக இப்பாடத்தில் உள்ள வினாக்கள் தயாரிக்கப்படும். பிரயோக பொருளியல், பிரயோக சமூகவியல் பற்றிய கோட்பாடுகள் பற்றியும் இலங்கையில் அண்மைக்காலப் பொருளாதாரம், சமூகவியல், அரசியல் என்பவற்றின் வரலாறு பற்றியும் பரீட்சார்த்திகள் அறிந்திருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40% சத வீதத்தைப் பெறுதல் வேண்டும்.

* பாட இலக்கம் 21- (இலங்கையைப் பற்றிய விசேட கவனத்துடன்) :

அபிவிருத்தி நிருவாக தொழிற்பாட்டு முறைமை.- பின்வரும் விடயங்கள் பற்றிய விசேட கவனத்துடன் அபிவிருத்தி நிருவாகம், தாபனங்கள், அவற்றின் இலக்கம் மற்றும் அந்நிறுவனங்களுக்கு இடையில் உள்ள தொடர்புகளைப் பற்றிய அறிவு பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது :-

(அ) இலங்கையிலுள்ள அரசாங்க அமைப்பு
(ஆ) இலங்கையிலுள்ள அரசாங்க அமைப்பின் அரசியலமைப்பு பின்னணி
(இ) உள்ளூராட்சி
(ஈ) மக்கள் அமைப்புகள்
(உ) அரசாங்க வியாபார அமைப்புக்கள்

குறிப்பு.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40% சத வீதத்தைப் பெறுதல் வேண்டும்.

* பாட இலக்கம் 22- முகாமையும் அமைப்பும் :

(அ) முகாமையும் அமைப்பும் பற்றிய கோட்பாடுகள்
(ஆ) அரசாங்கத் துறையிலுள்ள பிரச்சினைகளுக்கும் விவாத விடயங்களுக்கும், இக்கோட்பாடுகளைப் பிரயோகித்தல்
(இ) தற்கால முகாமைத்துவ முறைகள் மற்றும் உத்திகள் பற்றி பரீட்சார்த்திகள் அடைந்துள்ள அறிவை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்படும்.

குறிப்பு.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40% சத வீதத்தைப் பெறுதல் வேண்டும்.

* பாட இலக்கம் 23- அரச துறையின் நிதி முகாமை-பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(அ) இலங்கையின் நிதிக் கட்டுப்பாடு
அரசாங்க நிதி முகாமைக்கு ஏற்புடைய சட்டப்படியான ஏற்பாடுகள்
அரசாங்க நிதி குறித்து பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு நிதியம் என்பதன் கருத்து
திரட்டிய நிதியமும் அதன் செயற்பாடும்
ஒதுக்கீட்டின் நோக்கமும் ஒதுக்கீட்டு முறைகளும்
ஐயத்திற்குரிய நிதியம்
பிற நிதிகளும் அவற்றின் செயற்பாடும்
அரசாங்க வருமானம்
நிதி அமைச்சரின் அதிகாரங்கள், வேலைப்பளு மற்றும் பொதுத் திறைசேரியின் அதிகாரங்கள், வேலைப்பளு
ஆணைச்சீட்டுக்களும் கட்டு நிதிய அதிகாரமும்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி - அவரின் அதிகாரங்கள் மற்றும் வேலைப்பளு
அரசாங்க செலவினக் குழு
அரசாங்க தொழில் முயற்சிக் குழு

(ஆ) கணக்கீட்டு அலுவலர்கள், தலைமை கணக்கீட்டு அலுவலர்கள், அரசாங்க வருமானம் தொடர்பான கணக்கீட்டு அலுவலர்களை நியமித்தல், அவர்களின் அதிகாரங்கள் மற்றும் வேலைப்பளு

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) அரசாங்க செலவுகளை திட்டமிடலும் முகாமையும்
அமைப்புக்களின் நோக்கங்களையும் பணிகளையும் இனம்காணுதல்
அரசாங்க கொள்கைகள், நோக்கங்கள் குறி, இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனம்காணுதல்
அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல், தரங்கணித்தல், முன்னுரிமை வழங்கல், ஆண்டு வருவாய், செலவு மதிப்பீடுகளை தயாரித்தல் அத்துடன் இறுதி முடிவெடுத்தல்

(உ) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களை செய்தல், 'வீரமெண்ட்' திட்டத்தை செயற்படுத்தல், அரச துறையின் பதவியணி மற்றும் சம்பளங்களை முகாமை செய்தல், மொத்த ஆகுசெலவு மதிப்பீடுகளும் அவற்றை மீளமைத்தலும், குறைநிரப்பு மதிப்பீடுகள்

(ஊ) அரச உடமைகளின் நட்டங்களும் விட்டனவும்

(எ) பல்வேறு கணக்கு அலுவல்கள்

(ஏ) நிதி முகாமைக்காக வேலைப்பளுவை பொறுப்பளித்தல்

(ஐ) அரசாங்க நிதிகளின் பொறுப்பும் வங்கி கணக்கு நடைமுறையும்

(ஒ) அரசாங்க பெற்றுக்கொள்ளல் (Procurement) நடைமுறை.- பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை பெற்றுக்கொள்ளல், கேள்வி சபைகள் மற்றும் தொழிநுட்ப தரங்கணிப்பு குழுக்களின் அமைவு நியமன அதிகாரங்களும் வேலைப்பளுவும், கேள்விகளை தரங்கணிக்கும் நடைமுறை, வெளிநாட்டு உதவிகளின் பேரில் செயற்படும் கருத்திட்டங்களின் முகாமை.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சத வீதத்தைப் பெறுதல் வேண்டும்.

**இலங்கை கணக்காளர் சேவை**

*பின்னிணைப்பு 'ஆ'*

**இலங்கை கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை :**

(அ) முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பின்வரும் விடயங்களுடன் ஒவ்வொன்றும் 3 மணித்தியாலங்களைக் கொண்ட 4 வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

* அரசாங்க நிதி நடைமுறைகள்
* சட்டமும் முகாமையும்
* நிருவாகம்
* அறிக்கை எழுதுதலும் முகாமைக்குத் தகவல்களை வழங்குதலும்

(ஆ) முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் பாடங்களுக்கு அலுவலர்கள் ஒரே தடவையில் தோற்றலாம் அல்லது தாம் விரும்பினால் தனித்தனியாகவும் தோற்றலாம்.

(இ) பரீட்சார்த்திகள் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% புள்ளிகளை எடுத்தல் வேண்டும்.

***பாடத்திட்டம்***

* பாட இலக்கம் 30- அரசாங்க நிதி நடைமுறை.- அரசாங்க கொடுக்கல் வாங்கல் தொடர்பில் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள், உபயோகித்தல் மற்றும் திறைசேரிச் சுற்றறிக்கைகள் அத்துடன் வருவாயுடன் தொடர்புடைய நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் செயல் முறைகள், செலவினம், வெளிநாட்டு உதவி, ஆண்டு, குறைநிரப்பு மதிப்பீடுகள், அரசாங்கக் கடன்கள், வழங்கல்கள், பொருட்கள் பெறல், கேள்விகள், கட்டுநிதிகளும் முற்பணங்களும், நிதி அங்கீகாரம், நாட்டின் கணக்குகள் தொழிற்படு பொருளியல்வகுப்பீடுகள், நிகழ்ச்சித் திட்டமும் செயலாற்றுகை வரவு செலவுத் திட்டமும், நிதி அமைச்சரின் பணிகள், பொதுத் திறைசேரி, கொள்கை திட்டமிடல், செயற்படுத்தும் அமைச்சு, செயலாளர்கள், கணக்காய்வாளர்கள் அதிபதி ஆகியோர் தொடர்புற்றனவுமான நிதி ஒழுங்குவிதிகள்/நடைமுறைகள் என்பன மீதும் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவு சோதிக்கப்படும்.

* பாட இலக்கம் 31- சட்டமும் முகாமையும் :

சட்டம் :

சட்டம் பற்றிய வரைவிலக்கணம்
இலங்கையில் சட்டமுறைகள்
இலங்கையில் நீதிமன்ற முறைமைகள்
முகவர் நிறுவனச் சட்டம்/ஒப்பந்தச் சட்டம்
முகாமைச் சட்டம்
பொருள் விற்பனை
தவணைக் கட்டுப்பணக் கொள்வனவு
கைமாற்றத்தகு சாதனங்கள்
பிணைகள் தொடர்பான உத்தரவாதம்
காப்புறுதி

முகாமை :

முகாமைக்கான அறிமுகம்
முகாமையாளர்களது பணிகளும் தேர்ச்சிகளும்
திட்டமிடல் செய்முறையும் ஒழுங்கமைப்பு முறையும் மட்டங்கள் அமைத்தலும்
ஒழுங்கமைப்பு அமைவு
மனித வளங்களின் முகாமை
செயலாற்றுகை மதிப்பீடு
மேம்படுத்தல்
செயலூக்கமளித்தல்
தலைமைத்துவம்
தொடர்புத்துறை
தீர்மானம் எடுத்தல்
பிரச்சினைகளைத் தீர்த்தல்
மாற்றத்தை முகாமை செய்தல்
முகாமைத்துவ முரண்பாடுகள்
முகாமைத்துவ நேரம் செய்தல்
தரச்சிறப்பு வட்டங்களும் உற்பத்தித் திறனும்
முகாமை ஆசாரப் பண்பாடுகளும் பொறுப்பும்

* பாட இலக்கம் 32- நிருவாகம்.- தாபன விதிக்கோவையின் பகுதி I, பகுதி II பிரிவு ஏற்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்திகள் அடைந்துள்ள அறிவு சோதிக்கப்படும்.

* பாட இலக்கம் 33- **அறிக்கை எழுதுதலும் முகாமைக்குத் தகவல் சமர்ப்பித்தலும்** :

முகாமைத் தகவல் தொடர்பில் உரிய காலத்திற் செய்தல், சரியாகச் செய்தல், பூரணமாகச் செய்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம்
தொடர்பும் தகவல்களை கையாளுதலும்
கலாந்தர, நிமித்த காரண அறிக்கைகள்
கூட்டங்களில் நிகழ்ச்சிக் குறிப்புகள்
அறிக்கைகள் எழுதுதல்
முகாமை அறிக்கைகளின் அமைப்பு
வெளிப்படுத்தவேண்டிய முக்கிய பெறுபேறுகள்
பெறுபேறுகளுக்கு பொருள் விளக்கமளித்தல்
வேறுபாடுகளுக்கான யோசனைகள்

தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் புள்ளிவிபர முறைகளின் உபயோகம்
செயலாற்றுகை ஒப்பிடுதல்
முகாமை அறிக்கைகளில் விகிதங்கள், நூற்றுவீதங்களின் உபயோகம்
விளக்க வரைபடம் மூலம் விளக்கவுரை
தொழிலாற்றுறைச் சொற்பொழிவுகளும் விரிவுரைகளுக்கு செவிமடுத்தலும்
விரிவுரைகளை வாய்மொழி மூலம் அறிவித்தல்
குழுமக் கலந்துரையாடல்
கருத்தரங்குத் திறமைகள்
உரை நிகழ்த்துதல்

*பின்னிணைப்பு 'ஈ'*

இலங்கை கணக்காளர் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 2 ஆம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

* முகாமைத்துவ கணக்கியல்
* அரசாங்க நிதி முகாமை
* முகாமையும் அமைப்பும்

அலுவலர்கள் விரும்பினால் இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடங்களுக்கு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக தோற்றலாம். பரீட்சார்த்திகள் சித்தியெய்வதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

***பாடத்திட்டம்.***- முகாமைத்துவ கணக்கியல்- 3 மணித்தியால வினாத்தாள்

* *பாட இலக்கம் 36- முகாமைத்துவ கணக்கியல்*

*பாடத்திட்டம்.- கணக்கீட்டு மருவூட்டல் பற்றிய கட்டுப்பாட்டுக் கோட்பாடு வரையறையுடைய மற்றும் வரையறையற்ற ஒழுங்குமுறை, நிருவாக ஆகுசெலவு வகைகள், செயல் நிறைவேற்று நிர்மாணங்களையும் பெறுமதி நிர்மாணங்களையும் வரையறுத்தல், நிர்மாணங்களை மீளாயுதல், அறியத்தகு வளைக்கோட்டினையும் செயலக நோக்கங்களையும் ஆராய்தல், முரண்களையும் உப முரண்களையும் பகுத்தல் அவற்றின் உபபொருள், அவற்றால் குறிப்பிடப்படுபவை, அவற்றின் ஆய்வு, கட்டுப்பாட்டுக் கணக்கிடுசார் தொழில்படு வகைகள், பணக்கூறுகள், பாதீட்டு (வரவு செலவுத்திட்ட) எண்ணக்கரு, பாதீட்டுக் கட்டுப்பாடு, நிருவாக பாதீட்டு வகை, நூல் நிலையான மற்றும் வளைதகு பாதீட்டு, தலைமைப் பாதீட்டு, குறைநிறைப் பாதீட்டு, பாதீட்டு நிலையங்களை பாதீட்டு தயாரிப்புச் சேர்த்திணைப்பிலும் செயல் நோக்கங்களிலும் முகாமையினர் கலந்துகொள்ளுதல், பாதீட்டுக் காலமும் முக்கிய பாதீட்டுக் காரணியை இனமறிதலும்.*

* *பாட இலக்கம் 37- அரசாங்க நிதி முகாமை – (3 மணித்தியால வினாத்தாள்)*

*வினாக்களை தெரிவுசெய்தலாகாது.*

*அரசாங்க கணக்காளரின் பங்கு.- அரசியலமைப்பு சட்டவமைப்பு ஆகியவற்றின் வடிவத்தின்கீழ் அரசாங்க நிதி நிறுவன அமைப்பு, மத்திய அரசாங்கம், அரச கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி கூட்டுறவு இயக்கம் போன்றவை.*

*பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, திறைசேரியின் கடமைகள், திட்டமிடல் அமைச்சு, மதிப்பீட்டுக் குழு, கணக்காய்வாளர் அதிபதி, அரசாங்க கணக்குக் குழு, திரட்டிய நிதியம், பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் பிரச்சினைகள்.*

*நிதியச் சுற்றுவட்டம், திட்டமிடல், நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், வரவு செலவுகளை தயாரித்தல், நிதிய அங்கீகாரம், கணக்கிடுதல் அறிக்கை விடல், மதிப்பீடு மற்றும் கணக்காய்வு*

*கருத்திட்ட மதிப்பீட்டு நிழல் விலைகள், புள்ளி விபரங்கள் ஆகியவற்றை உபயோகித்தல், கொடுப்பனவு தொடர்பான சித்தாந்தம் மற்றும் உத்தேச பெறுமதி நிர்ணயம்*

*செலவுப் பயன் பகுப்பாய்வு, கழிவுக்கான நிதிப் பாய்ச்சல் உட்பிரதிபலனுடைய விகிதம், கருத்திட்டங்கள், நிலைப்படுத்தல் கருத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் மதிப்பிடல் பற்றிய பொருளாதார நிதிசார் முகாமைத்துவ பிரிவுகளை ஒப்புவிக்கைத்திறன்.*

*நிகழ்ச்சித்திட்ட நுட்பங்களை வலைப்பின்னல்கள் பகுப்பு முறை உபயோகம், வளங்களை ஒதுக்குதல், போக்குவரத்துப் பிரச்சினைகள், பாவிப்பதால் அல்லது காலக்கிரமத்தினால் தேய்வுறும் சொத்துக்கள் மற்றும் அவ்வாறு தேய்வுறாத எனினும், ஏதேனும் ஒரு காலப்பகுதிக்கு பாவிப்பதால் அசைவுறாத சொத்துக்களை திரும்பத் தாபித்தல், கருமப் பாதீட்டு அடிப்படை முறைகளை உருவாக்குதலும் அவற்றின் உபயோகமும், கரும அளவீடு, அளவை வீதங்கள், அலகுகள் நியதி ஆகியவற்றை தெரிவுசெய்தல், அளவு முறைகள், கருமப் பகுப்பாய்வு.*

*நிகழ்ச்சிப் பாதீட்டு நிகழ்ச்சித்திட்ட அமைவு, கடமைகளின்படி வகித்தல், நிகழ்ச்சித்திட்ட அலுவல்கள், செலவுக் கருத்திட்டங்கள், செலவு விடயங்கள் மற்றும் பொருளாதார செயற்பாடுகளை வகுத்தல்.*

*நிதிக் கட்டுப்பாட்டு முறைகள், பொறுப்புக்கள், உள்ளக நிருவாகம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள், உள்ளகக் கணக்காய்வு, வினைத்திறன்காண் கணக்காய்வு, முகாமைக் கணக்காய்வு, ஒவ்வாமை பகுப்பாய்வு, மூலதன பாதீட்டுத் தயாரிப்பு தொடர்பான தீர்மானங்கள், நீண்டகால திட்டமிடலும் அதன் முக்கியத்துவமும் எதிர்வுகூறுதலும், சரிபார்த்தல் மற்றும் எல்லைகள், அபாயப் பகுப்பாய்வு தீர்மானங்கள், நிகழ்ச்சித் தகவுக் காரணிகள்.*

*மூலதனத்திற்கான கேள்வி.- மூலதன உற்பத்தியும் ஊதியத்தை மதிப்பிடுவதில் ஏற்படும் பிரச்சினைகளும், கருத்திட்ட முன்னுரிமைப்படுத்தும் பிரமாணத்தின் நிதானமின்மைக்காக இடமளித்தல், மீளக் கொடுப்பனவு மீதான ஒப்பளவு விகிதத்தை கணிப்பீடு செய்தல், தற்கால தேறிய பெறுமதி மற்றும் கழிவு, நிதிப் பாய்ச்சலின் நலன்கள், வரிகளின் மீதான செயல் விழைவு, முதலீட்டு ஊக்குவிப்பு கருத்திட்ட செலவுக் கட்டுப்பாடு, இறுதிக் கணக்காய்வு.*

*உட்பிரமாணத் தீர்மானங்கள், உற்பத்திக் கலவை, உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தல், மாற்று உற்பத்தி முறைகள், தொழிற்சாலைகளை மூடிவிடுதல் தொடர்பான பிரச்சினைகள், விலைக்கொள்கை, கோடைக்கொள்கை, நுகர்வோரின் கேள்விப்போக்கின் செயல் விளைவுகள், கேள்வியின் மீதான இசைவுத் தன்மை, சந்தைப்படுத்தலின் உபாய முறைகள், செயலாற்றுகை தரங்கணிப்பின் தொழில்நுட்ப முறைகள், இலாபகரமான நிலை பற்றிய ஒப்பளவுகளின் விகிதங்களும்.*

*முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மூலம் பெறுகின்ற இலாபப் பிரமாணங்கள், முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் தன்மையும் அதன் கணிப்பும், திணைக்களங்களுக்கிடையிலான ஒப்பிடுகைக்கான கருமப் பிரமாணங்கள், செலவுப் பயன் பகுப்பாய்வு, செயற்பாட்டு மூலதனத்தின் முகாமை, அரசாங்க வர்த்தக நிறுவனங்களின் நிதிக் கட்டுப்பாடு, பாதீட்டு முகாமை, அறிக்கையிடல் கணக்கீட்டு வரைவிலக்கணம், நிதி வீதங்களின் பிரயோகம், அரசாங்க நிறுவனங்களில் விலையிடுதல் கணக்கறிக்கையின் வடிவமும் உள்ளடங்கும் விபரங்களும், அரசாங்க அறிக்கைகள் மற்றும் தொழில் முயற்சிகள்*

* பாட இலக்கம் 38- முகாமையும் அமைப்பும் - (3 மணித்தியால வினாத்தாள்)

பரீட்சார்த்தி முகாமையும் அமைப்பும் பற்றிய கோட்பாடுகளை எங்ஙனம் புரிந்திருக்கிறார் என்பதையும், அரச துறையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் சிக்கல்களுக்கும் இத்தத்துவங்களை எங்ஙனம் பிரயோகிப்பார் என்பதையும் நவீன முகாமைத்துவ திட்ட நுட்பங்கள் பற்றி அவருக்கு உள்ள அறிவினை எடைபோடும் பாங்கிலேயே இப்பாடத்திற்கென வினாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு 'உ'

**சிங்களம்**

சிங்களம் என்னும் பாடத்திலான தேர்வு பாட இலக்கம் 09 எழுத்துமூல மற்றும் விடையளித்தலுக்கான ஒரு பகுதியையும் பாட இலக்கம் 12 வாய்மூல விடையளித்தலுக்கான ஒரு பகுதியையும் கொண்டிருக்கும்.

எழுத்துமூல விடையளித்தலுக்கான வினாத்தாள் பின்வருவனவற்றில் வினாக்களைக் கொண்டிருப்பதுடன் அதற்குரிய காலம் 2 மணித்தியாலங்களாகும் :-

(1) இலக்கணம்
(2) தலைமைக்காரர் அல்லது கிராமசேவை உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவையும் பல்வேறு தொடர் கையெழுத்தில் எழுதப்பட்டவையுமான மனுக்களை அல்லது அறிக்கைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்
(3) ஆங்கிலத்திலுள்ள ஓர் அரச கருமப் பத்திரத்தை அல்லது சாதனத்தை சிங்களத்தில் மொழி பெயர்த்தல்.

வாய்மொழித் தேர்வு பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் :-

(1) ஆங்கிலத்திலுள்ள ஓர் அரசகரும சாதனத்தை ஒரு சிங்கள ஆள் அப்பந்தியை விளக்கி எழுத்தில் எழுதிக் கொள்ளுமுகமாக சிங்களத்தில் வாசித்தல்
(2) சிங்களத்தில் உள்ள மனுவை வாசித்தல்
(3) உரையாடலும் மொழிபெயர்ப்பும்.- பல்வேறு வகுப்பினரின் சிங்களத்தை விளங்கிக் கொள்வதற்குப் பரீட்சார்த்திக்குள்ள ஆற்றலையும் சாதாரண உரையாடலிலும் வழமையான அரசகரும அலுவலிலும் தனது கருத்துக்களை தெரிவிக்கவுள்ள ஆற்றலையும் அளவிடுவதே இப்பரீட்சையின் நோக்கமாகும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்காக பாடத்தின் எழுத்துமூல பகுதிக்கும் வாய்மூல பகுதிக்குமாக 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**தமிழ்**

தமிழ் என்னும் பாடத்திலான தேர்வு பாட இலக்கம் 10 எழுத்துமூல விடையளித்தலுக்கான ஒரு பகுதியையும் பாட இலக்கம் 13 வாய்மூல விடையளித்தலுக்கான ஒரு பகுதியையும் கொண்டிருக்கும். 2 மணித்தியால காலத்திற்குரியதான எழுத்துமூல விடையளித்தலுக்கான வினாத்தாள் பின்வருவனவற்றில் வினாக்களைக் கொண்டிருக்கும் :-

(1) இலக்கணம்
(2) தலைமைக்காரர் அல்லது கிராமசேவை உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவையும் பல்வேறு தொடர் கையெழுத்தில் எழுதப்பட்டவையுமான மனுக்களை அல்லது அறிக்கைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்
(3) ஆங்கிலத்திலுள்ள ஓர் அரச கரும பத்திரத்தை அல்லது சாதனத்தை தமிழில் மொழி பெயர்த்தல்

பாட இலக்கம்- 13 வாய்மொழித் தேர்வு - பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் :-

(1) ஆங்கிலத்திலுள்ள ஓர் அரச கரும சாதனத்தை ஒரு தமிழ் ஆள் அப்பந்தியை விளக்கி எழுத்தில் எழுதிக் கொள்ளுமுகமாக தமிழில் வாசித்தல்
(2) தமிழிலுள்ள மனுவை வாசித்தல்
(3) உரையாடலும் மொழிபெயர்ப்பும்.- பல்வேறு வகுப்பினரின் தமிழை விளங்கிக் கொள்வதற்குப் பரீட்சார்த்திக்குள்ள ஆற்றலையும் சாதாரண உடையாடலிலும் வழமையான அரசகரும மொழி அலுவலிலும் தனது கருத்துக்களை தெரிவிப்பதற்கு உள்ள ஆற்றலையும் அளவிடுவதே இப்பரீட்சையின் நோக்கமாகும்.

**English**

பரீட்சார்த்திகளின் தகவலிற்காக வினாத்தாளின் மாதிரி வடிவமொன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

Part A

(a) Fill in the blanks with the correct form of the Verb given within brackets :-

During the last war our country...............................1(be) a British Colony..................... 2 (take) a full part in the war effort. Consequently out tea, rubber and coconut........................... 3 (ship) to Britain at very favourable prices and the foreign exchange we..................... 4 (earn).............................5 (accumulate) as assests. Again during the Korean war in the early fifties our products............ 6 (fetch) good prices and we................. 7 (not have) any exchange problem. However,political independence....................... 8 (not

given rise) to any effort to.......................9(build up) our economy we.................... 10(be) a nation of consumers and we (Squnder) our foreign exchange on consumer goods which............12 (can produce) locally and incidentally diversified our economy. Over the last decade we.......................... 13 (begin) to feel the pinch when our primary products............. 14(fail) to command good prices in the world market while our requirments of food both rice and subsidiary food stuffs..........15(rise) in price.

(b) Fill in the blanks with the correct preposition (where necessary)

As Assistant Secretary...................... 16 charge....................... 17 subjects, it was my duty to convene groups of officers dealing................... 18 different aspects of development work in the Ministry................. 19 time to time. They discussed.................... 20 various problems that they confronted and which they could not cope......................... 21 on their own. We were thus able to share our experience................ 22 each other and make concrete proposals.................... 23 the Secretary every month. He in turn put................................ 24 his own plans for discussion.......................... 25 these meetings.

(c) Underline the correct letters given within brackets that would complete the spelling of the following words :-

26. har......... ment(rass/as/ass).
27. ember............(rass/as/ass)
28. tol................(arreance/erance/erence)
29. Par...................arian(liament/limen/liment)
30. bal.....................ing(let/lat/lot)
31. Itin....................... (erary/arary/erarie)
32. Pers................. (everance/everence/ewerence.)
33. bour....................... (geoise/joursie/juwarsy)
34. prolet.................(ariet/ariat/eriyat).
35. com..................... ate(memorr/emor/memor).

*குறிப்பு.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்காக பாடத்தின் எழுத்துமூல பகுதிக்கும் வாய்மூல பகுதிக்குமாக 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.*

(c) In each of the following statments underline the correct word within brackets :-

36. The inventory was checked by the Board of (Surveillance/Survey/Surveyors).
37. At the enquiry I had to be satisfied that the accused officer hads (contradicted/contravened/contaminated) the regulations.
38. Every receipt should have a (counterfoil/counterfeit/counterpane) for the purpose of audit.
39. There was a possibility that the prosecution had (fabricated/fumigated/promulgate) the eveidence.
40. (Discrete/Discretionary/Discriminatory) power was given to the Head of the Department under the relevant Act.
41. The police Party had (laid/lied/lain) in ambush until the bribe taker arrived.
42. The entire staff turned upon(facilitate/infiltrate/felicitate) the watcher on his retirement.
43. In times of national crisis we must avoid(luxuriant/luxurious) habits.
44. Martial music was played over the radio during height of the battle to keep up the (moral/morale/morals) of the people.
45. Candidates are advised to use(Stationary/Stationery) sparingly owing to the acute paper shortage.

(e) under line the correct Phase in the brackets that mean the same as the word or Phrase under lined in each sentence :-

46. In good management the boss should, support his staff in their work (back out/back up/back away).
47. The sales and replacement of stock amounted to over Rs.5,000 (rtun out/turn up/turn away).
48. We were warned at the start not to let out work get into arrears (set out/out set).
49. The younger son wasted his father's wealth in a few years (ran over/ran through).
50. I wanted to see the film, but the queue deterred me from going (put away/put off).

**Part B**

Read the following passage carefully and then answer the questions set out below :-

Most modern political ideals such, for example, as justice, liberty, constitutional government, and respect for the law or at least the definitions of them, began with the reflection of Greek thinkers upon the institutions of City State, But in the long history of political thought the meaning of such terms has been variously modified and always that meaning has to be understood in the light of the institutions by which the indicates were to be realized and of the society in which those institutions did their work. The Greek City States was so different from the political communities in which modern men live that it requires no small effort of the imagination to picture its is social and political life. The Greek Philosophers were thinking of political practices far different from any that have prevailed commonly in modern word, and the whole climate of opinion in which the work was done was different. Their problems though not without their analogies in the preset, were never identical with modern problems and the ethical apparatus by which political life was evaluated and criticized varied widely from any that now prevails. In order to understand at all accurately what their thories meant it necessary first to realize at least rougly what kind of Institutions they had in view and what citizenship connected as an effect and as an ideal, to the public

for whom they wrote. For this purpose the Government of Athens is especially important, partly because, it is the best known, but chiefly because it was an object of special concern to the greatest of Greek Philosophers.

As compared with modern states the ancient City-State was exceedingly small both in area and in population. The numbers were exceedingly uncertain but, a figure somewhat in excess of three hundred thousand would be approximately correct. Such an agrrangement of a small territory denominated by a single City was typical off the City State.

In each of the following cases, choose the alternative which in your opinion supports the views expressed in the above passage. Place a tick (right mark) against the correct answer:-

51. Athens is significant for the students of Greek political thought mainly because :-

(a) It was the most powerful of the Greek City- States :
(b) Its ideals had been carefully studied by the Greeks themselves ;
(c) It had the most ideal form of Government ;
(d) it is the best known of the Greak City - States ;

52. Greek political thought was concerned with problems :-

(a) Entirely unrelated to,
(b) identical with,
(c) different from analogous but to,

53. The moral and religious basis of Greek political idea is :-

(a) very similar to modern moral and religious ideas :-
(b) unknown ;
(c) very different from modern moral and religious ideas.

54. It is :-

(a) easy,
(b) not at all easy,
(c) Impossible,
For a modern man to imagine what life was like in a Greek City-State.

55. In comparison with the ancient Greek City States are :-

(a) very large,
(b) very small,
(c) about the same size.

56. The population of an ancient Greek City States was :-

(a) much less than 300,000
(b) over 3 million
(c) just over 300,000

57. The City-State of Athens comprises :-

(a) a small territory governed by a singly city,
(b) a large territory governed by a number of cities,
(c) a small territory with village councils,
(d) a large territory with a decentralised administration,

58. At different times in the history of the world people :-

(a) have thought in basically the same way,
(b) have thought in different ways,
(c) have contradicted the views of people of the previous generation.

59. Details of political theory are derived from Greek Political thought :-

(a) because the Greek City States was very similar to modern states,
(b) in spite of Greek City State being very different from modern States,
(c) because modern political theorists are students of Greek Philosophy,

60. The meaning of political ideal at the particular moment in European History since the time of the Greeks can be defined only be :-

(a) relating it to its context,
(b) tracing it back to its original meaning among the Greeks,
(c) investigating the meaning of the Greek word for it,
(d) taking into account only those features in it which have persisted throughout its history.

61. Write sentences using each of the following words so as to bring out its meaning clearly :-

Arbitration, emoluments, etiquette, consolidate, hypothetical, retrospective, exigencies, evaluate, review, empower.

**Either**

62. Write a letter to the Head of an Educational Institute in an English Speaking country, setting out the following information in an orderly manner :

(i) The equivalence of our examination certificate to the certificate specified in this letter cannot be determined as the examining authorities in Sri Lanka have not been consulted by the institution concerned in that country :-

(ii) The G. C. E. (Ordinary Level) Credit Pass has been officially equated with an Ordinary Pass in London G. C. E. (Ordinary Level) :-

(iii) The receipt of the letter sent to the Commissioner of Examinations is acknowledged :
(iv) Any further information in this matter may be obtained from the embassy of the Republic of Sri Lanka in the Country.

63. Write a memorandum to the Secretary, Bureau of Standards marking out a case for the adoption of the 24 hour clock in this country stating the advantages of such a measure.

**இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை**

*பாடத்திட்டம்*

*(1) பாட இலக்கம் 04- நிதி முறைமைகள் :*

*(அ) இலங்கை அரசாங்க நிதி ஒழுங்குவிதி - பகுதி 1 (X ) ஆம் அத்தியாயம் நீங்கலாக)*
*(ஆ) நடப்பாண்டு மதிப்பீடுகளும்.- உதாரணம் : அவற்றை தயாரித்தல், தலைப்புக்கள், நிதி முறைகள், ஒதுக்கீட்டுச் சட்டங்கள்*

***குறிப்பு***.- *பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40% சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.*

*(2) பாட இலக்கம் 05- நிர்வாகம்.- இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் நிர்வாகப் பாடத்திட்டத் திட்டத்தைப் பார்க்கவும்.*

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

அலுவலக உபயோகத்திற்காக [ ]

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**

*இலங்கை நிருவாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை பொறியியற் சேவை, இலங்கை பொலிஸ் சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழிப் பரீட்சையும் - 2008*

அலுவலர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : [ ]
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

விண்ணப்பிக்கும் நகரம் : [ ]
கொழும்பு -1
யாழ்ப்பாணம் -2

திணைக்களத் தலைவர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

(பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.)

1\. (அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

(ஆ) (i) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலத்தில்/தமிழில்) :----.

(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2\. அஞ்சல் முகவரி (அனுமதி அட்டை அனுப்புவதற்காக) (ஆங்கில கெபிற்றல் எழுத்தில்) :----.

3\. அலுவலர் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் :----.
**குறிப்பு**.- இதனைப் பூர்த்திசெய்யமுன் 4 (ஆ) பார்க்கவும்.

4\. (i) அலுவலர் எச்சேவையைச் சேர்ந்தவர் என்பது :----.

(ii) அந்தச் சேவையில் நியமனம் செய்யப்பட்ட திகதி : ஆண்டு: [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

5\. அறிவித்தலின் முதலாம் பந்தியில் காட்டப்பட்டுள்ள பாட இலக்கங்களுடன் தோற்றும் பாடங்களை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். (விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கு மேலதிகமாக வேறு பாடங்களுக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது).

5.1 (i) பாட இலக்கம் [ ]
(ii) பாட இலக்கம் [ ]
(iii) பாட இலக்கம் [ ]
(iv) பாட இலக்கம் [ ]
(v) பாட இலக்கம் [ ]
(vi) பாட இலக்கம் [ ]
(vii) பாட இலக்கம் [ ]

6\. பிறந்த திகதி :
ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

7. தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் :----.

8. பதவி :----.

திணைக்களத்தின் பெயர் :----.

9. இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த அலுவலராயின் அலுவலர் அச்சேவையில் நியமனம் செய்யப்பட்ட திகதி :----.

10. இலங்கை நிருவாக சேவையைச் சேராத அலுவலராயின் அலுவலருக்குரிய சேவை :----.

11. இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த அலுவலராயின் அலுவலர் விண்ணப்பிக்கும் பரீட்சை :----.

(ஏற்புடையதல்லாவற்றையும் கீறிவிடவும்)

(அ) முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (அ) :----.
(ஆ) இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (ஆ) :----.
(இ) இரண்டாம் மொழிப் பரீட்சை (இ):----.

12. நிருவாக சேவையைச் சேராத அலுவலராயின் அலுவலர் விண்ணப்பிக்கும் பரீட்சை : (ஏற்புடையதல்லாதவற்றை கீறிவிடவும்)

13. இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ தோற்றியுள்ளீர்களா என்பதைக் குறிப்பிடவும். ஆமெனில் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் குறிப்பிடவும் :----.

| பரீட்சை | பாடம் | வருடம் | மாதம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

மேலே குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், மேலே 4 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவரென்றும், நான் உறுதிமொழிகிறேன்.

மேலும் பரீட்சை நடாத்தல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்குகிறேன்.

இவ்விண்ணப்பத்தில் ஒட்டப்பட்ட முத்திரைகள் பெறுமானமுள்ளவையென்றும், என்னால் பெறுமதி நீக்கம் செய்யப்படமுன் பாவிக்கப்படாதவையென்றும் மேலும் உறுதிமொழிகிறேன்.

14. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா :----.

முத்திரைக் கூடு

திகதி :----.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

முன்னிலைப்படுத்தப்படுகிறது.

இதில் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./திருமதி/செல்வி ........................................................ இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கும், 04 ஆம் பந்தியில் அவரால் தரப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவரென்றும் சான்றுப்படுத்துகிறேன்.

பரீட்சார்த்தியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவியும்.

திகதி :----.

## வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு

*அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்-2008*

### *அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2008*

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் தரம் IIஆ தொழில்நுட்ப சேவையின் அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை' எனும் முகவரிக்கு 2008.06.20 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர்கள் பதவி'' என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1. *சேவை நிபந்தனைகள்.*- (1) இப்பதவியானது நிரந்தர மானதும் ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புக்கள் வழங்குதல் வேண்டும்.

(2) நியமனமானது, நியமனத் திகதியிலிருந்து முதல் மூன்று வருட காலப்பகுதிக்கு தகுதிகாண் காலத்தைக் கொண்டிருக்கும்.

(3) பொது நிருவாக சுற்றறிக்கை இல. 07/2007 இன்படி குறித்த காலப்பகுதிக்குள் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

2. *சம்பளங்களும் படிகளும்.*- பயிற்சி தரம் :

1 ஆம் வருடம் - ரூபா 12,920 மாதாந்த படி
2 ஆம் வருடம் - ரூபா 13,040 மாதாந்த படி

பொது நிருவாக சுற்றறிக்கை இல. 6/ 2006 (iv) இன் நியதிகளின்படியான சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) இப்பதவிக்கு பொருந்தும்.

அளவீட்டு அலகுகள் மற்றும் சேவைகள் பரிசோதகர்கள்.-(MT2-2006-A ரூபா 14,570-10X170-11X180-6X240-14X320-ரூபா - 24,170

1 ஆவது தடைகாண் பரீட்சையானது இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் II ஆ இற்கு உரித்தளிக்கப்பட்டதன் பின்னரான மூன்று வருடங்களுக்குள்ளும் 2 ஆவது தடைகாண் பரீட்சையானது தரம் IIஅ இற்கு உரித்தளிக்கப்பட்டதன் பின்னரான மூன்று வருடங்களுக்குள்ளும் சித்தியடைதல் வேண்டும்.

3. **கல்விசார் தகைமைகள்**.- க. பொ. த. (உ./த.) பரீட்சையில் பௌதீகவியல் மற்றும் தூய கணிதம்/பிரயோக கணிதம் உள்ளடங்கலான மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் விவசாயம் போன்ற பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஒரே தடவையில் உயர் கணிதம், இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் விவசாயம் என்பவற்றிலிருந்தான பௌதிகவியல் மற்றும் உயர் கணிதம்/இணைந்த கணிதம் உள்ளடங்கலான மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி, இலக்கியம், எண்கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏனைய ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. **ஏனைய தகைமைகள்** :

(1) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 இற்கும் 45 இற்கும் இடையிலான வயதினைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆகக்கூடிய வயதெல்லையானது பொருந்தாது)

(3) ஆரோக்கியமானவராகவும் சிறந்த நல்லொழுக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் 40 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களின் தகைமைகள் பரிசோதிக்கப்படும். நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. இரண்டு பாடங்களிலும் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று தகைமைகளைப் பூர்த்திசெய்த பரீட்சார்த்திகள் பயிற்சித் தரத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

பரீட்சார்த்திகள் இரண்டு வருட பாட மற்றும் செய்முறை பயிற்சி நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் திணைக்களத் தலைவரினால் வழங்கப்படும் ''தகுதிகாண் சான்றிதழ்'' இனைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாயின் ஆட்சேர்ப்பு வகுப்பான வகுப்பு IIஆ இற்கு நியமிக்கப்படுவார்கள்.

6. இப்பரீட்சையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் வசிக்கும் முகவரிகளுக்கு அண்மித்த நகரத்தை தெரிவுசெய்தல் வேண்டும். அவ்வாறே, பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் அவர்களின் பரீட்சை நிலையம் மற்றும் நகர இலக்கம் என்பன கீழே தரப்பட்டுள்ள அட்டவணைக்கமைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும் :-

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| மாத்தளை | 04 |
| கண்டி | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| ஹம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| திருகோணமலை | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| புத்தளம் | 17 |
| குருநாகல் | 18 |
| அநுராதபுரம் | 19 |
| பொலன்னறுவை | 20 |
| பதுளை | 21 |
| மொனராகலை | 22 |
| கேகாலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கிளிநொச்சி | 25 |

7. **திறந்த பரீட்சை**.- (i) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவர் விண்ணப்பித்த மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் பரீட்சையின் மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்தி அனைத்தும் பாடங்களையும் ஒரே மொழியில் தோற்றுதல் வேண்டும்.

(ii) பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :

(1) ***நுண்ணறிவு சோதனை***.- காலம் : 03 மணித்தியாலங்கள் - மொத்தப் புள்ளிகள் 100.
இப்பரீட்சை வினாத்தாளானது பரீட்சார்த்தியின் தர்க்கரீதியானக ஆற்றலை மதிப்பீடு செய்யும் வேற்றுமை வினா பகுப்பாய்வுத் திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஆகிய தொடர்பான வினாக்களையும் கொண்டிருக்கும்.

(2) தொழில்நுட்ப ரீதியான வினாக்கள்.- காலம்: 03 மணித்தியாலம் - மொத்தப் புள்ளிகள் 100.
இப்பரீட்சை வினாத்தாளானது பௌதீக தர அளவீடு மற்றும் பிரயோக பௌதீகவியல் ஆகியவற்றிலுள்ள அறிவினை மதிப்பீடு செய்யும் நோக்கிலான வினாக்களைக் கொண்டிருக்கும். க. பொ. த. (உ./த.) அறிவு போதுமானது.

8. விண்ணப்பமானது விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். முதல் பக்கத்தில் இல. 1 முதல் 8 வரையிலான விடயங்களும் இரண்டாம் பக்கத்திலுள்ள ஏனைய விடயங்களும் பரீட்சார்த்தியினால் தெளிவாக நிரப்படுத்தல் வேண்டும். மாதிரிக்கு ஒவ்வாத மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களின் போட்டோ பிரதிகளை வைத்திருப்பது அனுகூலமானதாகும். சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான விண்ணப்பங்களின் தலைப்பானது அம்மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

9. ஏற்கனவே அரசாங்க சேவை/மாகாண சேவையிலுள்ளவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரிய தமது நிறுவனங்களின் தலைவரினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

10. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பிவைத்த பின்னர் உடனடியாக அதனை அறிவிக்குமுகமாக பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்படும். அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் 2 அல்லது 3 நாட்களுக்குள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் சான்றுப்படுத்திய போட்டோ பிரதி :மற்றும் பரீட்சை பற்றுச்சீட்டு, பதிவுத்தபாலின் பற்றுச்சீட்டு மற்றும் பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியே இருப்பாராயின் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம் ஆகியவற்றையும் அனுப்பிவைப்பது பயனுள்ளதாகும்.

11. பரீட்சைக் கட்டணம் ரூபா 300. இது இலங்கை வங்கியின் திம்பிரிகஸ்யாய கிளையில் "0000407320" ஆம் இலக்க கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமோ அல்லது அதன் ஒரு பகுதியோ எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பம் மற்றும் பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு ஆகியவற்றின் போட்டோ பிரதிகளை வைத்திருப்பது பயனுள்ளதாகும். பற்றுச்சீட்டினை அதற்குரிய கூட்டில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும்.

12. விண்ணப்பதாரி பரீட்சை மண்டப மேற்பார்வையாளரை திருப்திப்படுத்தும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியன மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். போட்டிப் பரீட்சையின் அனுமதியானது பரீட்சைக்கான தகுதியினை ஏற்றுக்கொண்டதாக அமையாது. அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை ஆணையாளரினால் வழங்கப்பட்ட விதிகளுக்கமைவாக ஒழுகுதல் வேண்டும். சட்டங்களையும் விதிகளையும் மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்குள்ளாவார்கள்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும் [ ]

**வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு**

அளவீட்டுக அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் அளவீட்டு சேவைகள் மற்றும் உபகரணங்கள் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை — 2008

பரீட்சை மொழி மூலம் : [ ]
சிங்களம் 2- தமிழ் 3- ஆங்கிலம் 4

(கூட்டுக்குள் பொருத்தமான இலக்கத்தை குறிப்பிடுக.)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் நகரம் மற்றும் நகர இல.
(வர்த்தமானி அறிவித்தல் 06 இன்படி)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| [ ] | [ ] |

1. முதலெழுத்துக்களுடன் பெயர், (தனிப் பெரிய எழுத்துக்களில்) :
உதாரணம் : நிமல் A. B. :----.

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.

3. முழுப்பெயர் :----.
(சிங்களம்/தமிழில்) :----.

4. ஆங்கில பெரிய எழுத்துக்களில் நிரந்தர முகவரி :----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்.)

5. பால் : ☐
(ஆண் - 0, பெண் 1) (கூட்டில் உரிய இலக்கத்தை குறிப்பிடுக.

6. குடியியல் உரிமை : ☐
(திருமணம் ஆகாதவர் 1, திருமணம் ஆனவர் 2)
கூட்டில் உரிய இலக்கத்தைக் குறிப்பிடுக.

7. தேசிய இனம் : ☐
(சிங்களம் -1, தமிழ் -2, இந்திய தமிழ் -3, முஸ்லிம் -4, ஏனையோர் 5) கூட்டில் உரிய இலக்கத்தை குறிப்பிடுக.)

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. (அ) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியிலுள்ளவாறு வயது :

ஆண்டு ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

10. நீங்கள் பிறப்பு அல்லது பதிவின் மூலமான இலங்கைப் பிரஜையா ? (பதிவின் மூலமாயின் விபரங்களைத் தருக.) :----.

11. கல்விசார்/தொழில்சார் தகைமைகள் :----.

11.1 க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை
சித்தியடைந்த ஆண்டு :----.
சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |
| 11. | |
| 12. | |

11.2 க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை
சித்தியடைந்த ஆண்டு :----.
சுட்டெண் :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

11.3 ஏனைய கல்விசார்/தொழில்சார் தகைமைகள் :

| பாடம் | நிறுவகம் | திகதி |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

12. தற்போதைய மற்றும் முன்னைய தொழில்கள் (ஏதாவது) :----.

| பதவி | இருந்து | வரை | சம்பளம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

13. தாங்கள் எப்போதாவது அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளீர்களா ? (அவ்வாறாயின் விபரங்களைத் தருக) :----.

14. தாங்கள் அரசாங்க உத்தியோகத்தராயின் எப்போதாவது ஒழுக்காற்று விசாரணைக்குட்படுத்தப்பட்டீர்களா ? :----.

15. தாங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

16. உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் :

(1) ------------. (2) ------------.
------------. ------------.
------------. ------------.

17. ஏனைய விபரங்கள் :----.

18. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கி :----.
பற்றுச்சீட்டு :----.
திகதி :----.

காசுக்கட்டளையின் பற்றுச்சீட்டினை கழராதவாறு ஒட்டுக.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதெனவும் இத்தால் உறுதியுரைக்கிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவலானது பொய்யானதாகவோ அல்லது பிழையானதாகவோ

தேர்வுக்கு முன்பாக கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் நான் அறிவேன் என்பதுடன் நான் இப்பரீட்சையின் அனைத்து விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கும் இணங்கிக் கொள்கிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரி அரசாங்க சேவை/மாகாண சேவையில் பணிபுரிபவரெனின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இவர் மேற்படி பதவிக்கு தெரிவுசெய்யப்படுமிடத்து இவரை தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் உத்தியோகபூர்வ
முத்திரையும்.

திகதி :----.

5-91

---

இலங்கை புகையிரத திணைக்களம்
வாணிப அத்தியட்சகர் பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை

இலங்கை புகையிரத திணைக்களத்தின் வாணிப அத்தியட்சகர் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக இத்தால் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**2. சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்குரிய புதிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் அ. நி. சு. 06/2006 எஸ். எல். 1 இல் 20 ஆவது சம்பள ஏற்றமாகும். அதாவது ரூபா 36,755- 16 X 1,050- 53,555 ஆகும்.

**3. வயதெல்லை.**- வயது வருடம் 35க்கு குறையாமலும் 45க்கு கூடாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.)

**4. கல்வி மற்றும் வேறு தகைமைகள் :**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் (பொருளியல் விஞ்ஞான பட்டம் சம்பந்தமாக கூடிய கவனம் செலுத்தப்படும்).

அல்லது

லண்டன் போக்குவரத்து பட்டய நிறுவனத்தின் உறுப்பினர் பரீட்சையில் பெற்ற திகதி உடன் அரசாங்க அல்லது வாணிப நிறுவனம் ஒன்றில் பொறுப்பு வாய்ந்த பதவியின் 10 வருடத்திற்கு குறையாமல் சேவையாற்றியிருத்தல்

அத்துடன்

போக்குவரத்து துறையில் நவீன நிலைமைகள் சம்பந்தமான சிறந்த அறிவு இருத்தலுடன் கம்பனிச் சட்டம், வர்த்தக புள்ளி விவரவியல் சம்பந்தமாக கடமை புரிய போதுமானளவு அறிவு இருக்க வேண்டியதுடன் புகையிரத போக்குவரத்தையும் அதன் வருமானத்தையும் கூட்டுவதற்கான வழிமுறைகளை ஏற்பாடு செய்வதற்கான ஆற்றலையும் கொண்டிருத்தல் (பிரச்சாரம் சம்பந்தான நவீன முறைகள், வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய முறை, பொதுமக்கள் தொடர்பு சம்பந்தமாக கடமை புரிய போதுமான ஆற்றல் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்).

அல்லது

(ஆ) பதவி நிலை தரத்தில் 5 வருட சேவைக் காலத்துடன் புகையிரத திணைக்களத்தின் வாணிப பகுதி சம்பந்தமாக சிறந்த அறிவுள்ள 15 வருடத்திற்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட அரசாங்க சேவை உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

**5. ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை.**- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 15/90க்கு இனங்க திறந்த போட்டிப் பரீட்சையை நடாத்தி கூடியளவு புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரி அவசியமானளவு தொகையினர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டு நிறுவப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தி விசேட தராதரங்களுக்கு புள்ளிகள் வழங்கி கூடிய புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரி நியமிப்பு செய்வதற்காக விதந்துரைக்கப்படுவர்.

இப்பரீட்சை இரு கேள்வித் தாள்களை உள்ளடக்கியதாக காணப்படுவதுடன், ஒரு கேள்வித் தாளுக்கு விடையளிக்க மூன்று மணித்தியாலயங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு கேள்வித் தாளுக்கு 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படுவதுடன், தகுதி பெறுவதற்காக குறைந்தது 50 புள்ளிகளேனும் பெறுதல் வேண்டும். விடய உள்ளடக்கம் கீழ் உள்ளவாறாகும்:

I. கேள்வித்தாள்.- **முகாமைத்துவமும் பொதுவான நிர்வாகமும்,**
முகாமைத்துவ கோட்பாடு, காரியாலய நிர்வாகமும் வழங்கல் நடவடிக்கை, முதலீட்டுக் கோட்பாடு, போக்குவரத்து துறையில் பயன்படுத்தப்படும் ஆய்வு மற்றும் செயல் முறை, சந்தைப்படுத்தல் முகாமைத்துவ கோட்பாடு அதாவது ஊக்குவிப்பு, விநியோகம், விலையிடல், புதிய சேவைகள்-மனிதவள முகாமைத்துவம்.

II. கேள்வித்தாள்.- **போக்குவரத்து கோட்பாடும் கணக்கீட்டு நடவடிக்கையும்** போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய சட்டதிட்டங்கள், புகையிரத கணக்கீட்டு சட்ட திட்டங்கள், போக்குவரத்து துறைக்குரிய வர்த்தக சட்டதிட்டங்கள், போக்குவரத்து துறையில் பயன்படுத்தப்படும் சட்டதிட்டங்கள்.

**6. சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தர மானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். நியமிக்கப்படுபவர்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவித் தொகை செலுத்துதல் வேண்டும்.

**7. சேவை நிபந்தனை.**- (அ) தாபன விதிக்கோவையின் II ஆவது பிரிவின் 10 இலிருந்து 12 வரையான பந்திகளில் காணப்படும் பிரிவுகளும் இதற்கு ஏற்புடையதாகும்.

(ஆ) இலங்கைச் சோசலிசக் குடியிரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாட்டின் படியும் அரச கரும மொழி கொள்கையை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக தற்போதுள்ள அ. நி. சு. 36/89 இன்படி அரச கரும மொழி இரண்டும் அல்லாத மொழி மூலம் சேவைக்கு சேர்ந்த உத்தியோகத்தர்கள் சேவைக்கு சேர்ந்து மூன்று வருட கால எல்லைக்குள் குறிப்பிட்ட தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அதே போன்று அ. நி சு. 07/2007 இன்படி அரச கரும மொழி இரண்டில் எம் மொழியில் சேவைக்கு சேர்ந்தாலும் சேவைக்கு சேர்ந்த 05 வருட காலத்திற்குள் மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சிபெறல் வேண்டும் ;

(இ) தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர் சேவைக்கு சேர்ந்து 12 மாத காலத்திற்குள் கீழ்க்காணப்படும் சட்டதிட்டங்கள் சம்பந்தமாக வேலை மேற்கொள்வதற்கான (இது வாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்துமூல மாகவோ நடாத்த இடமுண்டு) அறிவை பெறல் வேண்டும்.

(i) புகையிரத இயக்கமும் வாணிப நடவடிக்கை சம்பந்தமான சட்டமும் பிரமாணமும், திணைக்கள உபதேசம் (நிர்வாகம்) புகையிரததத்திற்கு ஏற்புடைய தாபன விதிக்கோவையின் பிரிவும் நிதிப் பிரமாணமும்.

(ii) நாட்டின் பஸ் லொறி போன்ற சேவைகள் நடாத்தப்படும்/ நிர்வகிக்கப்படும் சட்டங்களும் பிரமாணங்களும்

**8. விண்ணப்பிக்கும் முறை.-** (I) இவ்வறிவித்தலின் இறுதியில் வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய விண்ணப்பத்திரத்தை தயாரித்தல் வேண்டும்.

(II) அரசாங்க/ கூட்டுத்தாபன/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்திரத்தை தாம் கடமை புரியும் நிறுவனத்தின் சேவைப் பிரதானியினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் போது விண்ணப்பப் பத்திரத்திலுள்ள காரணிகள் உண்மையானதெனவும், சேவைப் பிரதானியினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும் மேலும் அவ்விண்ணப்பதாரி விண்ணப்பம் அனுப்பி வைத்தது எப்போது என்பதை குறிப்பிட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினம் அல்லது அதற்கு முன்பு போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(III) சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்க கூடியவாறு "செயலாளர், போக்குவரத்து அமைச்சு, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாணிப அத்தியட்சகர் பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி :

உள்நாட்டு விண்ணப்பம் : 2008.06.16 ஆந் திகதி,
வெளிநாட்டு விண்ணப்பம் : 2008.06.30 ஆந் திகதி.

(IV) தாமதித்து கிடைக்கும், மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்கு இயைவாத, பூரணமற்றதும் பொய்யான தகவல்கள் உள்ளடக்கப்பட்டதுமான விண்ணப்படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(V) விண்ணப்பத்திரமும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய கடிதங்களும் அனுப்பவேண்டியது போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கே ஆகும். வேறெந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட பெயருக்கும் அனுப்பி வைக்க முடியாது.

**குறிப்பு.-** (i) விண்ணப்பத்திரமோ அதனோடு இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் கடிதமோ தபாலில் காணாமல் போனது பற்றியும் தாமதமானது பற்றி விடுக்கப்படும் எவ்வேண்டுகோளும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. கடைசி தினம் வரை விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பாததால் ஏற்படும் விளைவுகளை விண்ணப்பதாரியோ ஏற்க வேண்டி ஏற்படும்.

(ii) வெளி நாடுகளிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அச்சிடப்பட்ட விண்ணப்பத்திரத்தை வெளிநாடுகளிலுள்ள இலங்கை பிரதிநிதிகள் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ள முடியுமாகும். தமது விண்ணப்பத்திரத்தை போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அனுப்புவற்காக தாம் வதியும் அல்லது தாம் வதியும் நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கை பிரதிநிதிகள் காரியாலயத்திற்கு குறிப்பிட்ட தினத்திற்குள் பாரமளிக்க விண்ணப்பதாரியின் விருப்பத்தின்படி முடியுமாகும்.

(iii) இலங்கை அரசின் கீழ் சேவையாற்ற தேர்ந்தெடுக்கும் இலங்கை விண்ணப்பதாரிகள் சேவைக்கான தேகாரோக்கியத்தை பெற்றுள்ளார் என்பதை நிருபிக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர் முன்னிலையில் பரீசீலனைக்கு உட்படுத்தல் வேண்டும். அவ் வைத்திய பரிசோதனைக் கட்டணமும் கப்பற் கட்டணமும் விண்ணப்ப தாரியினாலேயே ஏற்ற வேண்டும்.

9. வர்த்தமானி அறிவித்தலில் பகுதி : I : தொகுதி II (அ) இன் அரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரச சேவை பதவிகளுக்கு செய்யப்படும் நியமனம் தொடர்பான நிபந்தனைகள் பால் கவனம் கோரப்படுகின்றது.

10. பரீட்சை கட்டணம்.- இப்பரீட்சைக்காக வேண்டி திரும்ப கொடுக்கப்படாத ரூபா 250 ஆக கட்டணம் அறவிடப்படும். அது கொடுக்கப்படும் காரியாலயம் 'மருதாணை தபால் காரியாலயம் (01000) எனக் குறிப்பிட்டு புகையிரத பொது முகாமையாளருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையை தபால் காரியாலயத்தில் பெற்றுக்கொண்டு அதை விண்ணப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். உண்மைப் பிரதியை தவிர புகைப்பட பிரதியை இணைக்கக்கூடாது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

செயலாளர்,
போக்குவரத்து அமைச்சு.

போக்குவரத்து அமைச்சு,
கொழும்பு 10,
2008, மாச்சு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை புகையிரத திணைக்களம்**

*இலங்கை புகையிரத திணைக்களத்தின் வாணிப அத்தியட்சகர் பதவி*

1. முழுப்பெயர் :----.

2. தபால் முகவரி :----.

3. (i) பிறந்த திகதி :----.
   (ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி தினத்தன்று வயது :-

   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

4. இனம் :----.
   (இலங்கை பிரஜையா என்பதை குறிப்பிடவும்.) :----.

5. திருமணம் முடித்தவரா அல்லது முடிக்காதவரா என்பது பற்றி : ----.

6. கல்வி மற்றும் தொழில் தகைமை உடன்/அல்லது அனுபவம் :----.
   (பெறப்பட்ட சகல பட்டங்களும், திறமைச் சித்தி, தொழில் தகைமை சம்பந்தமாக விவரம், அவற்றின் திகதி, வகுப்புச் சித்தி மற்றும் அவை பெறப்பட்ட பாடங்கள், மொழி மூலம், நிறுவனங்களின் பெயர் போன்றவற்றை குறிப்பிடவும்).

7. பாடசாலையை விட்டு விலகிய பின்பு செய்த தொழில்கள்/ அல்லது மேற்கொண்ட பயிற்சி நெறிகள் சம்பந்தமான விவரம் (நிறுவனமும் காலவெல்லையும்) விலகுவதற்கான காரணத்தையும் குறிப்பிடவும்.)

8. தற்போது செய்யும் தொழில் :----.

9. குனநலச் சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்கள் :----.

10. வேறு தகைமைகள் :----.

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

இவ்விண்ணப்பப்படிவத்தில் தன்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானதெனவும், சரியானதெனவும், அத் தகவல்கள் யாவும் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு காணப்படுமிடத்து நான் தகுதியற்றவராக கருதப்படுவதற்கும் நியமித்ததன் பின்பு தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன். ரூபா 250.00 ஐ...................... தபால் காரியாலயத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட இலக்கம் .................ஐ உடைய காசுக் கட்டளையை இத்துடன் இணைத்து அனுப்புகிறேன்.

திகதி : ..........................................................
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்

12. **திணைக்கள தலைவரின் சான்றிதழ்** :

இக்காரியாலயத்தில் சேவை புரியும்.................... என்பவரது விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தி இத்துடன் அனுப்பி வைக்கிறேன். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை உண்டு/இல்லை. இவரின் வேலை, நடத்தை திருப்திகரமானது/ அதிருப்பதிகரமானது எனவும் அவர் இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுமிடத்து சேவையிலிருந்து விலக்களிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

................................................
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி:-----.
(இறப்பர் இலட்சினையை பொறிக்கவும்).

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதி செய்தல்** :

இவ்விண்ணப்பத்தை முன் வைக்கும்.......................... என்பவரை நான், தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் இன்று என் முன்னிலையில் அவரின் கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

...............................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பதவி :----.
விலாசம் :
திகதி:-----.
(இறப்பர் இலட்சினையை பொறிக்கவும்).

5- 130

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.